# ஓசூர் மாநகராட்சி

## மாமன்ற கூட்ட அறிக்கை

2021ம் ஆண்டு ஜூன் மாதம் 30ம் தேதி புதன் கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு சாதாரணக் கூட்டம் மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள தனி அலுவலர் அறையில் நடைபெறும். எனவே இரண்டாம் நிலை அலுவலர்கள் அனைவரும் கூட்டத்தில் தவறாது பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தனி அலுவலர்
ஓசூர் மாநகராட்சி

---

## மாமன்றப் பொருள்

**பொருள் எண் 1**

இம்மாநகராட்சிக்கு சொந்தமான காந்தி சிலை அருகிலுள்ள கடை எண்.1ன் சந்தை மதிப்பின்படி உயர்த்தி நிர்ணயக்கப்பட்ட மாத வாடகை அதிகமாக உள்ளதை குறைத்து தர வேண்டி திரு.ஆ.பாபு என்பவரால் தொடரப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.டபள்யு.பி.19538/2020ல் வழக்கின் தீர்ப்பில் மேற்படி கடைக்கு செலுத்தப்பட்டு வரும் 50 சதவிகித மாத வாடகை ரு.67500/–க்கு 18 சதவிகித சரக்கு மற்றும் சேவை கட்டணத்தை மனுதாரராகிய திரு.ஆர்.பாபு என்பவர் செலுத்த வேண்டும் என தீர்ப்பு வரப் பெற்றுள்ளது.

அதன்பேரில், மேற்படி கடைக்கு செலுத்தப்பட்டு வரும் 50 சதவிகித மாத வாடகை ரு.67500/–க்கு 18 சதவிகித சரக்கு மற்றும் சேவை கட்டணத்தை செலுத்தும்படி திரு.ஆர்.பாபு என்பவருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கினை மாநகராட்சி சார்பில் வாதாடிய திரு.என்.சுப்பராயலு, வழக்கறிஞர் என்பவர் மேற்படி வழக்கிற்கான கட்டணம் ரூ.15000/–யை தருமாறு 22.4.2021ம் தேதிய கடிதத்தின் மூலம் கோரியதின் பேரில், மேற்படி கட்டணம் ரூ.15000/–யை திரு.என்.சுப்பராயலு, வழக்கறிஞர் என்பவருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.7501/2019/அ3

பொருள் எண் 2

இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, ஒருங்கிணைந்த நிதித்துறை அலுவலக வளாகம், 4வது தளம், நந்தனம், சென்னை–35 அவர்களின் செ.மு.ஆணை கடிதம் ந.க.எண்.பபா1/33511/2016 நாள்.30.08.2017 செயல்முறை ஆணை கடிதத்தில் 1989–90 முதல் 2012–13 வரையிலான ஆண்டுகளின் சேமநலநிதி, 5வது ஊதியக்குழு மற்றும் 6வது ஊதியக்குழுக்கான வட்டித் தொகை மொத்தம் ரூ.54,04,668/– அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து அத்தொகை முழுவதும் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட பணியாளர்களின் சேமநலநிதி கணக்கில் வரவு வைக்கப்பட்டு விட்டது.

தற்போது 2013–14 முதல் 2020–21 வரையிலான ஆண்டுகளுக்கு சேமநலநிதி கருவூலக இருப்புகளுக்கான வட்டி கோரும் கருத்துருக்கள் தயார் செய்து இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, சென்னை அவர்களுக்கு உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, கிருஷ்ணகிரி அவர்களின் மூலம் அனுப்ப வேண்டியுள்ளது.

மேற்படி 2013–14 முதல் 2020–21 வரையிலான ஆண்டுகளுக்கு சேமநலநிதி கருவூலக இருப்புகளுக்கான வட்டி கோரும் கருத்துருக்களை தனியாரிடம் ஒப்படைத்து முடிக்க ஆகும் தோராய செலவினம் ரூ.36000/–க்கும், மேற்படி கருத்துருக்களை தயார் செய்ய தனியாரிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரவும், மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3308/2016/சி1

பொருள் எண் 3

இம்மாநகராட்சியில் கட்டிட அனுமதி கோரி வரும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து கேட்பு எழுப்பிய பின்னர், நீண்ட நாட்களாக விண்ணப்பதாரர்களால் தொகை செலுத்தாமல் சில கோப்புகள் நிலுவையிலுள்ளது. கேட்பு எழுப்பிய பின் 30 நாட்களுக்குள் தொகை செலுத்தவில்லை என்பதால், மேற்படி நிலுவையிலுள்ள கோப்புகளை இணையதளத்திலிருந்து நீக்கம் செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 4**

ஓசூர் மாநகராட்சியில் 2013–14 முதல் 2020–21 வரையிலான ஆண்டுகளுக்கு சேமநலநிதி கருவூலக இருப்புகளுக்கான வட்டி கோரும் கருத்துருக்களை தனியாரிடம் ஒப்படைத்து முடிக்க வேண்டி, 21.06.2021ம் தேதி விலைப்புள்ளிகள் கோரியதில், வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு.டி.ராஜசேகர்,<br>கணக்கு ஆலோசகர்,<br>332, ரயில்வே காலனி, காந்தி ரோடு,<br>கிருஷ்ணகிரி. | ரூ.36000/– |
| 2 | ஸ்ரீ மோனிசா கம்பியுட்டர்ஸ்,<br>237ஏ, முனியப்பன் கோவில் தெரு,<br>மாணிக்கம்பாளையம் ரோடு, சூளை, ஈரோடு. | ரூ.48000/– |
| 3 | லக்சயா இன்போடெக்,<br>11, ஸ்ரீராம் ஸ்போர்ட்ஸ் காம்பளக்ஸ்,<br>கோபால் பிள்ளையார் கோவில் தெரு,<br>திருவண்ணாமலை. | ரூ.60000/– |

**அலுவலக குறிப்பு**

**வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திரு.டி.ராஜசேகர், கிருஷ்ணகிரி என்பவரின் குறைவான விலைப்புள்ளியினை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.**

**ந.க.எண்.3308/2016/சி1**

## பொருள் எண் 5

இம்மாநகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகன எண் TN70H0652 வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் செய்யப்பட்டு 20000கி.மீட்டருக்கு மேல் ஓடிவிட்டதால் தற்போது ஆயில் சர்வீஸ், பில்டர் மற்றும் இதர பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பழுதுகளை உடனடியாக சரி செய்ய ஏதுவாகவும், தற்போது Covid-19 ஊரடங்கு தற்போது அமலாக்கத்தில் உள்ளதால் மேற்படி பழுதுகளை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் செய்ய இயலாத சூழ்நிலை உள்ளதால் வாகனத்தின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள K J Motors, Hosur அவர்களுக்கு பட்டியல் தொகை ரூ.9956/-யை வழங்கவும் மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணி உத்திரவு மற்றும் பட்டியல் தொகை வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண் 6

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 39 ஜீவா நகரில் **“உங்கள் தொகுதியில் முதலமைச்சர்”** என்ற குறை தீர்க்கும் அலுவலகத்திற்கு 958874 Road – BT(TN/MAWS/KGI/I/UTM/R3/169JUN21/958874) நாள்.16.06.2021 என்ற விண்ணபத்தின் படி திருமதி.மகேஸ்வரி என்பவர் அலைபேசி எண் 9600577403 சாலை வசதி வேண்டுமென கேட்டு விண்ணப்பித்துள்ளனர். இடம் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. மனுதாரர் குறிப்பிடும் இடத்தில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கான மதிப்பீடு தொகை ரூ.20.00 இலட்சம் ஆகும். மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண் 7

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 25 கம்பன் நகரில் **“உங்கள் தொகுதியில் முதலமைச்சர்”** என்ற குறை தீர்க்கும் அலுவலகத்திற்கு 386888 Road Maintenance/New Road – (TN/MAWS/KGI/I/UTM/R3/175JUN21/386888) நாள்.17.05.2021 என்ற விண்ணபத்தின் படி திரு.விஜயபாஸ்கர் என்பவர் அலைபேசி எண் 9942942818 சாலை வசதி வேண்டுமென கேட்டு விண்ணப்பித்துள்ளனர். இடம் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. மனுதாரர் குறிப்பிடும் இடத்தில் கால்வாய் மற்றும் தார்சாலை அமைக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கான மதிப்பீடு தொகை ரூ.15.00 இலட்சம் ஆகும். மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண் 8

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17 மத்தம் அக்ரஹாரம் **"உங்கள் தொகுதியில் முதலமைச்சர்"** என்ற குறை தீர்க்கும் அலுவலகத்திற்கு 382672 Road Maintenance/New Road – (TN/MAWS/KGI/I/UTM/R3/17May21/3868881) நாள்.17.05.2021 என்ற விண்ணப்பத்தின் படி திரு.சங்கர் என்பவர் அலைபேசி எண் 9894174333 சாலை வசதி வேண்டுமென கேட்டு விண்ணப்பித்துள்ளனர். இடம் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. மனுதாரர் குறிப்பிடும் இடத்தில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கான மதிப்பீடு தொகை ரூ.20.00 இலட்சம் ஆகும். மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண் 9

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்காணும் வார்டு பகுதிகளில் உள்ள மண் சாலைகள், பழுதடைந்த தார்சாலைகள் மற்றும் பழுதடைந்த சிமெண்ட் சாலைகளை சீர் செய்யும் பொருட்டு ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழும நிதியின் கீழ் மேற்காணும் சாலைகளை சீர் அமைக்க ஏதுவாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் பின்வருமாறு

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 18 வேளாங்கண்ணி பள்ளி முதல் ASTC ஹட்கோ 100 அடி சாலையில் தார்சாலை அமைத்தல் | 100.00 |
| 2 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 18 ASTC ஹட்கோ முதல் சம்ப் வரை 100 அடி சாலையில் தார்சாலை அமைத்தல் | 100.00 |
| 3 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 18 ASTC ஹட்கோ சம்ப் முதல் உள்வட்ட சாலை வரை 100 அடி சாலையில் தார்சாலை அமைத்தல் | 100.00 |
| 4 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 26 சானசந்திரம் பிரதான சாலையில் தார்சாலை அமைத்தல் | 100.00 |
| 5 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 36 இராயக்கோட்டை சாலை முதல் பெரியார் நகர் செல்லும் பிரதான சாலை எண் 1ல் தார்சாலை அமைத்தல் | 100.00 |
| 6 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 36 இராயக்கோட்டை சாலை முதல் பெரியார் நகர் செல்லும் பிரதான சாலை எண் 2ல் தார்சாலை அமைத்தல் | 50.00 |
| 7 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 27 இராயக்கோட்டை சாலை முதல் சூடசந்திரம் வரை தார்சாலை அமைத்தல் | 100.00 |

| | | |
|---|---|---|
| 8 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 27 சூடசந்திரம் முதல் சென்னத்தூர் வரை தார்சாலை அமைத்தல் | 50.00 |
| 9 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 39 தின்னூர் நுண்ணுயிர் செயலாக்க மையம் செல்லும் சாலையில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் | 50.00 |
| 10 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 11 பாகலூர் ரோடு ஹட்கோவில் பிரதான வீதி எண் 1ல் தார்சாலை அமைத்தல் | 100.00 |
| 11 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 11 பாகலூர் ரோடு ஹட்கோவில் பிரதான வீதி எண் 2ல் தார்சாலை அமைத்தல் | 100.00 |
| 12 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 11 பிருந்தாவன் நகர் பிரதான சாலையில் தார்சாலை அமைத்தல் | 100.00 |
| 13 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 26 முல்லை நகர் த.வீ.வ.வாரிய குடியிருப்பு பகுதியில் தார்சாலை அமைத்தல் | 50.00 |
| 14 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 18 புதிய ASTC ஹட்கோ சேவை சாலை மற்றும் மேற்கு பகுதி வீதிகளில் தார்சாலை அமைத்தல் | 100.00 |
| 15 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 9 ஆவலப்பள்ளி ஹட்கோவில் தார்சாலை அமைத்தல் | 50.00 |
| 16 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 33 தளி ஹட்கோவில் தார்சாலை அமைத்தல் | 50.00 |
| 17 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 37 த.வீ.வ.வாரிய குடியிருப்பு பகுதி எண் 10ல் தார்சாலை அமைத்தல் | 100.00 |
| 18 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 11 பிருந்தாவன் நகர் குறுக்கு தெருக்களில் தார்சாலை அமைத்தல் | 50.00 |
| 19 | ஒசூர் மாநகராட்சி வார்டு எண் 35 பழைய டெம்பிள் லேண்ட் அட்கோவில் தார்சாலை அமைத்தல் | 50.00 |
| | **Total** | **1500.00** |

மேற்காணும் வரிசை எண் 1 முதல் 19 வரை குறிப்பிட்டுள்ள பணிகளுக்கும் பணிகளின் எதிரே குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு தொகைக்கும், பிரேரனைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கிருஷ்ணகிரி அவர்களுக்கு ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழும நிதியின் கீழ் நிர்வாக அனுமதி வழங்க கோரி முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழும நிதியின் கீழ் மேற்கொள்ளவும் கூடுதல் செலவீனம் ஏதேனும் ஏற்படின் அச்செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 10**

இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் மண்டலம்–1,5 மற்றும் 7மண்டலம் 9 க்குட்பட்ட பகுதிகளில் சேகரித்த குப்பைகளை உரக்கிடங்கில் கொண்டு சேர்க்க போதிய வாகனங்கள் இல்லாத காரணத்தால் பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மேற்படி பகுதிகளில் குப்பைகளை அள்ளும் பணிகளை செய்ய வாடகை அடிப்படையில் டிராக்டரை வழங்க ஆவண செய்யுமாறு குறிப்பின் மூலம் சம்மந்தப்பட்ட துப்புரவு ஆய்வர்கள் கோரியுள்ளனர்.

சம்மந்தப்பட்ட துப்புரவு ஆய்வர்களின் குறிப்பில் கோரியுள்ளவாறு, இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் மண்டலம்–1,5 மற்றும் 7மண்டலம் 9 க்குட்பட்ட பகுதிகளில் சேகரித்த குப்பைகளை உரக்கிடங்கில் கொண்டு சேர்க்க போதிய வாகனங்கள் இல்லாத காரணத்தால் பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மேற்படி பகுதிகளில் குப்பைகளை அள்ளும் பணிகளை செய்ய வாடகை அடிப்படையில் தனியார் டிராக்டர்களை அமர்த்தி கொள்ளவும், மேற்படி பணியினை 1.7.2021 முதல் 31.12.2021 வரை செய்யவும், மற்றும் ஜேசிபி, TATA MINI HITACHI வாகனத்தை இயக்குவதற்கும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.10.00 லட்சத்திற்கும், மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 11**

இம்மாநகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் நோய் அதிவேகமாக பரவி வருவதை தொடர்ந்து முன்னேச்சரிக்கை நடவடிக்கை பொருட்டு, லைசால் 2000 லிட்டர் கொள்ளளவில் உடனடியாக தேவைப்படுகிறது. எனவே 2000 லிட்டர் லைசால் வாங்கிக்கொள்ளவும், அதற்காகும் செலவினம் தொகை ரூ.4,70,650/–க்கும் மாமன்றத்தின் அனுமதி பெறவும், அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் விலாசம் | அளவு | விலை ரூ. |
|---|---|---|---|
| 1 | உரிமையாளர், Arunai Agro Tech, Thiruvannamalai | 1 லிட்டர் | 199.42/– |
| 2 | உரிமையாளர், Arunai AgroTech Pvt.Ltd, Thiruvannamalai | 1 லிட்டர் | 200.6/– |
| 3 | உரிமையாளர், Shridi Sai Agros, Chennai | 1 லிட்டர் | 212.40/– |

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் உரிமையாளர் Arunai Agro Tech, Thiruvannamalai என்பவர் கொடுத்துள்ள 1 லிட்டர் லைசால் குறைந்த விலை விகிதம் ரூ.199.42/– குறிப்பிட்ட விலைப்புள்ளியினை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1072/2021/எச்1)

**பொருள் எண் 12**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 37 தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதி எண் 10ல் ரவுண்டானா அருகில் ஏற்கனவே உள்ள பாலம் மற்றும் கால்வாய் பழுதடைந்து கழிவுநீர் மற்றும் மழைநீர் செல்ல போதிய வசதி இல்லாததால் கழிவுநீர் மற்றும் மழைநீர் சாலையிலேயே தேங்கி செல்கிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதாக வந்த புகாரினை அடுத்து இவ்விடத்தினை ஒசூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்களும் மாநகராட்சியின் ஆணையர் அவர்களும் 28.06.2021 அன்று நேரடி ஆய்வு செய்தனர். பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று இவ்விடத்தில் புதியதாக கால்வாய் மற்றும் பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினர். அதன்படி பணிகளை முடிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.25.00 இலட்சம் ஆகும். எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 13**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 38 பாரதிதாசன் நகர் மூன்றாவது குறுக்கு தெருவில் ஏற்கனவே உள்ள கால்வாய் பழுதடைந்து கழிவுநீர் மற்றும் மழைநீர் செல்ல போதிய வசதி இல்லாததால் கழிவுநீர் மற்றும் மழைநீர் சாலையிலேயே தேங்கி செல்கிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதாக வந்த புகாரினை அடுத்து இவ்விடத்தினை ஒசூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்களும் மாநகராட்சியின் ஆணையர் அவர்களும் 28.06.2021 அன்று நேரடி ஆய்வு செய்தனர். பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று இவ்விடத்தில் புதியதாக கால்வாய் அமைக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினர். அதன்படி பணிகளை முடிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சம் ஆகும். எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 14**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 37 தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதி எண் 10ல் மூன்றாவது மற்றும் நான்காவது குறுக்கு தெருவில் உள்ள திறந்த வெளி கால்வாய், கழிவுநீர் குழாய் மற்றும் சாலைகள் பழுதடைந்து பொதுமக்கள் சென்று வர சிரமப்படுவதாக வந்த புகாரினை அடுத்து இவ்விடத்தினை ஒசூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்களும் மாநகராட்சியின் ஆணையர் அவர்களும் 28.06.2021 அன்று நேரடி ஆய்வு செய்தனர். பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று இவ்விடத்தில் புதியதாக திறந்த வெளி கால்வாய், கழிவுநீர் குழாய் மற்றும் சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினர். அதன்படி பணிகளை முடிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.25.00 இலட்சம் ஆகும். எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 15**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 36 பாலாஜி நகர் முதலாவது குறுக்கு தெரு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அருகில் சாலைகள் பழுதடைந்து பொதுமக்கள் சென்று வர சிரமப்படுவதாக வந்த புகாரினை அடுத்து இவ்விடத்தினை ஒசூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்களும் மாநகராட்சியின் ஆணையர் அவர்களும் 28.06.2021 அன்று நேரடி ஆய்வு செய்தனர். பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று இவ்விடத்தில் புதியதாக சிமெண்ட் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினர். அதன்படி பணிகளை முடிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.25.00 இலட்சம் ஆகும். எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 16**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 38 கிருஷ்ணப்பா காலனி குறுக்கு தெருக்களில் ஏற்கனவே உள்ள கால்வாய் பழுதடைந்து கழிவுநீர் மற்றும் மழைநீர் செல்ல போதிய வசதி இல்லாததால் கழிவுநீர் மற்றும் மழைநீர் சாலையிலேயே தேங்கி செல்கிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதாக வந்த புகாரினை அடுத்து இவ்விடத்தினை ஒசூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்களும் மாநகராட்சியின் ஆணையர் அவர்களும் 28.06.2021 அன்று நேரடி ஆய்வு செய்தனர். பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று இவ்விடத்தில் புதியதாக கால்வாய் அமைக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினர். அதன்படி பணிகளை முடிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சம் ஆகும். எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் 17

**ஆவின் பாலகத்திற்கு பால் விற்பனை செய்ய பேருந்து நிலையம் அருகில் பெட்டி வைக்க ஆவின் கூட்டுவறவு நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆவின் நிறுவனம் மேற்படி பால் விற்பனை செய்ய முகவர் திரு.நசீர் அகமது என்பவருக்கு வழங்கியுள்ளது. மேற்படி நபர் ஆவினில் பால் விற்பனை செய்யாமல் காலனி மற்றும் பேக் விற்பனை செய்து வந்துள்ளார். அதனால் மேற்படி பெட்டியை காலி செய்யக் கோரி ஆவின் நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டதில், ஆவின் முகவர் திரு.நசீர் அகமது சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.**

**மேற்படி வழக்கு 21.04.2021ல் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், மனுதாரர் நிலுவை வாடகையை தீர்ப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 8 வாரங்களுக்குள் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும் எனவும் வழக்கறிஞர் கட்டணம் ரூ.15000/-ஐ வழங்குமாறும் 22.04.2021ம் தேதிய கடித்த்தில் திரு.என்.சுப்பராயலு, வழக்கறிஞர், சென்னை அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**மேற்படி வழக்கறிஞர் கட்டணம் ரூ.15000/-ஐ திரு.என்.சுப்பராயலு, வழக்கறிஞர், சென்னை அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு**

**மாமன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் 6371/2018/அ3**

பொருள் எண் 18

24.05.2021ம் தேதி முதல் தமிழக அரசால், நிபந்தனைகளற்ற முழு ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்படவுள்ளதால், தமிழக அரசின் உத்திரவின்படி பொதுமக்களுக்கு ஊரடங்கு காலத்தில் காய்கறிகள், பழங்கள் மற்றும் மளிகைப் பொருட்கள் அவரவர் இல்லங்களைச் சென்றடையும் வண்ணம் விநியோகம் செய்ய ஏதுவாக, 24.05.2021ம் தேதி முதல் ஒசூர் மாநகராட்சிப் பகுதிகளில் நான்குச் சக்கர வாகனங்கள் மூலம் வீதிவீதியாக சென்று காய்கறிகள், பழங்கள் மற்றும் மளிகைப் பொருட்கள் அவரவர் இல்லங்களில் நேரடியாக விற்பனை செய்ய ஏற்பாடு செய்யவும்,

கொரோனா நோய் தொற்றுக் காரணமாக மரணமடைந்தவர்களை எரிவூட்டுவதற்கு கட்டணங்கள் எதுவுமின்றி இலவசமாக எரிவூட்டுவதற்கும் ரோட்டரி சங்கம் மூலம் ஏற்பாடு செய்யப்படவுள்ளதால், அதனை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் விதமாக பெயர் பலகை 2 எண்ணிக்கையின் மூலம் விளம்பரப்படுத்தவும், மேற்படி பதாகைகள்/பலகைகள் தயார் செய்ய விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. மேற்படி விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்வருமாறு

| வ. எண் | விவரங்கள் | M/s.S.A.R. Printers (Screens), Hosur Rs. | M/s.Kalai Flex Printing, Hosur Rs. | M/s.Shanmugam Digital Printing Rs. |
|---|---|---|---|---|
| 1 | நடமாடும் காய்கறி/பழங்கள் விற்பனை செய்வதற்கான பதாகைகள் Size : 6' X 4 – 50 எண்ணிக்கை | 27,500/– | 27,800/– | 28,500/– |
| 2 | Size : 3' X 4 – 50 எண்ணிக்கை | 17,500/– | 18,000/– | 18,000/– |
| 3 | Size : 4' X 2.5 – 100 எண்ணிக்கை | 30,000/– | 33,000/– | 32,000/– |
| 4 | Size : 4' X 2.5 – 16 எண்ணிக்கை | 5,600/– | 5,800/– | 5800/– |
| 5 | எரிவாயு மயானம் பெயர் பலகை Size : 6' X 5' – 2 எண்ணிக்கை | 4,800/– | 5,600/– | 5,000/– |
| | **மொத்தம்** | **85,400/–** | **90,200/–** | **89,300/–** |

மேற்படி பெறப்பட்ட 3 விலைப்புள்ளிகளில், M/s.S.A.R. Printers (Screens), Hosur என்பவர் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே மேற்படி குறைந்த விலைப்புள்ளி வழங்க M/s.S.A.R. Printers (Screens), Hosur என்பவருக்கு பணி உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 3925/2014/எப்1

## பொருள் எண் 19

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்வரும் இடங்களில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் பழுதடைந்து விழுந்து விழும் நிலையில் உள்ளது. இதனால் பொதுமக்கள் பாதிப்படைவதுடன், அருகிலுள்ள வீடுகளும் பாதிக்கப்படும். எனவே, அசம்பாவிதங்கள் ஏதும் நிகழ்வதற்கு முன்பு இம்மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை இடித்து அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளலாம். 1) பேடரப்பள்ளி (30,000 லிட்டர்), 2) பாரதியார் நகர் (30,000 லிட்டர்), 3) திம்மசந்திரம் (30,000 லிட்டர்). இதற்காகும் செலவினம் ரூ.5.40 இலட்சம் ஆகும். எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

3. மாமன்றம் அனுமதிக்கலாம்.
4. மேற்படி செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 20**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9 NGGO's காலனி குறுக்கு தெருக்களில் உள்ள கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் சிறுபாலங்கள் பழுதடைந்துள்ளது. இதனால் கழிவுநீர் சாலையில் வழிந்தோடுகிறது. இதனால் பொதுமக்களின் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. இதனால் சுகாதார சீர்கேடு உருவாகிறது. இதனை சீரமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். இப்பகுதியில் ஆணையாளர் மற்றும் பொறியாளரால் நேராய்வு மேற்கொள்ளப்பட்டு உடனடியாக சீரமைத்து தருமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பணியினை மேற்கொள்ள ரூ.9.90 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 21**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 26 சானசந்திரம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் உள்ள கழிவுநீர் குழாய்கள் அனைத்தும் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் குடியிருப்புகளிலிருந்து கழிவுநீர் வெளியேறாமல் தேங்கியுள்ளது. இதனால் சுகாதார சீர்கேடு உருவாவதாகவும் இப்பகுதியில் புதிய கழிவுநீர் குழாய் அமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். இப்பகுதியில் ஆணையாளர் மற்றும் பொறியாளரால் நேராய்வு மேற்கொள்ளப்பட்டது. அதுசமயம் பழுதடைந்த குழாய்களை மாற்றி புதியதாக அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பணியினை மேற்கொள்ள ரூ.9.90 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 22**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 18 அண்ணாசாமிபிள்ளை தெருவில் உள்ள நச்சுத்தொட்டி பழுதடைந்து கழிவுநீர் தனியார் நிலத்தில் தேங்கியுள்ளது. இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் கழிவுநீரை முறைப்படி கால்வாய் அமைத்து தர்கா ஏரி வரை ஆவண செய்யுமாறும் அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். இப்பகுதியில் ஆணையாளர் மற்றும் பொறியாளரால் நேராய்வு மேற்கொள்ளப்பட்டது. அதுசமயம் இப்பகுதியில் கழிவுநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பணியினை மேற்கொள்ள ரூ.9.90 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 23**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 26 முல்லை நகர் த.வீ.வ.வாரிய குடியிருப்பு பகுதியில் உள்ள கழிவுநீர் குழாய்கள் அனைத்து அளவில் சிறியதாகவும், ஆங்காங்கே பழுதடைந்தும் உள்ளது. இதனால் குடியிருப்புகளில் தேங்கி சுகாதார சீர்கேடு உருவாகிறது. எனவே இவைகளை மாற்றி அமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். இப்பகுதியில் ஆணையாளர் மற்றும் பொறியாளரால் நேராய்வு மேற்கொள்ளப்பட்டது. அதுசமயம் பழுதடைந்த குழாய்களை மாற்றி புதியதாக அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பணியினை மேற்கொள்ள ரூ.9.90 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 24**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 39 நேரு நகர் மற்றும் ஜீவா நகர் குறுக்கு தெருக்களில் உள்ள கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் சிறுபாலங்கள் பழுதடைந்துள்ளது. இதனால் கழிவுநீர் சாலையில் வழிந்தோடுகிறது. இதனால் பொதுமக்களின் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. மேலும் இதனால் சுகாதார சீர்கேடு உருவாகிறது. இதனை சீரமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். இப்பகுதியில் ஆணையாளர் மற்றும் பொறியாளரால் நேராய்வு மேற்கொள்ளப்பட்டது. அதுசமயம் இப்பகுதியில் கழிவுநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பணியினை மேற்கொள்ள ரூ.9.90 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 25**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 32 இராமநாயக்கன் ஏரி அருகிலுள்ள பூங்காவில் மின் கம்பங்கள், மின் விளக்குகள் மற்றும் மின் விளக்குகளுக்கான கேபிள் ஆகியவை பழுதடைந்துள்ளன. இதனால் பொதுமக்கள் பூங்காவிற்கு சென்று வரவும் மற்றும் காலை மற்றும் இரவு வேலைகளில் நடைபயிற்சி மேற்கொள்ள முடியவில்லை எனவும் பூங்காவில் சிறுவர் சென்று விளையாட முடியாமல், இரவு நேரங்களில் பாம்பு நடமாட்டம் அதிகமாக உள்ளதாகவும் எனவே பழுதடைந்துள்ள மின்கம்பங்களை மாற்றி அமைக்க வேண்டுமென அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். இப்பகுதியில் ஆணையாளர் மற்றும் பொறியாளரால் நேராய்வு மேற்கொள்ளப்பட்டது. அதுசமயம் இப்பகுதியில் பழுதடைந்துள்ள மின்கம்பங்களை மாற்றி அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பணியினை மேற்கொள்ள ரூ.9.90 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 26**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 39 தேன்கனிக்கோட்டை சாலை, மத்திகிரி கூட்ரோடு அருகில் தற்பொழுது நெடுஞ்சாலை துறையின் மூலம் Centre Median அமைக்கப்பட்டு சாலையின் அகலம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இச்சாலையானது வாகன போக்குவரத்து மிகுந்த சாலையாக உள்ளதால் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. மேலும் இப்பகுதியில் போதுமான தெருவிளக்குகள் இல்லாததால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதால் இச்சாலைப்பகுதியில் Centre Median-ல் Steel Post-வுடன் கூடிய Double Leaf LED மின்விளக்குகள் அமைத்து கொடுக்க வேண்டுமென இப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். எனவே மேற்படி பகுதிகளில் ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களால் நேராய்வு மேற்கொள்ளப்பட்டது, அதுசமயம் இப்பகுதியில் தெருவிளக்குள் அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பணியினை மேற்கொள்ள ரூ.9.90 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 27**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 39 வாசவி நகர் பகுதியில் கழிவுநீர் கால்வாய் வசதி இல்லாத காரணத்தினால் குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் சாலையில் தேங்கி சுகாதார சீர்கேடு உருவாவதாகவும் இப்பகுதியில் கழிவுநீர் கால்வாய் வசதி ஏற்படுத்தி கொடுக்குமாறும் அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். இப்பகுதியில் ஆணையாளர் மற்றும் பொறியாளரால் நேராய்வு மேற்கொள்ளப்பட்டது. அதுசமயம் இப்பகுதியில் கழிவுநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் வசதி ஏற்படுத்தி கொடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பணியினை மேற்கொள்ள ரூ.9.90 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 28**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20 ராம் நகர் ARRS பின்புறம் பகுதியில் சாலை மற்றும் கழிவுநீர் குழாய் வசதி இல்லாத காரணத்தினால் பொதுமக்களின் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளதாகவும் அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். இப்பகுதியில் ஆணையாளர் மற்றும் பொறியாளரால் நேராய்வு மேற்கொள்ளப்பட்டது. அதுசமயம் இப்பகுதியில் சிமெண்ட் கற்கள் (Paver block) மற்றும் கழிவுநீர் குழாய் அமைத்து கொடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பணியினை மேற்கொள்ள ரூ.9.90 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 29**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 26 வெற்றி நகர் சானசந்திரம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதியில் கழிவுநீர் குழாய் பழுதடைந்து சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். இப்பகுதியில் ஆணையாளர் மற்றும் பொறியாளரால் நேராய்வு செய்யப்பட்டது. அதுசமயம் இப்பகுதியில் கழிவுநீர் குழாய் அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பணியினை மேற்கொள்ள ரூ.9.90 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 30**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9 ஆவலப்பள்ளி ஹட்கோ மற்றும் மூவேந்தர் நகரில் கழிவுநீர் குழாய் மற்றும் சிறுபாலம் பழுதடைந்து சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். இப்பகுதியில் ஆணையாளர் மற்றும் பொறியாளரால் நேராய்வு செய்யப்பட்டது. அதுசமயம் இப்பகுதியில் கழிவுநீர் குழாய் மற்றும் சிறுபாலம் அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பணியினை மேற்கொள்ள ரூ.9.90 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 31**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5 அலசநத்தம் நுண்ணுயிர் செயலாக்க மையத்தில் ஆண்கள் மற்றும் பெண்கள் சுமார் 25 தூய்மை பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர் மற்றும் சுகாதார ஆய்வாளர் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர்களும் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கான கழிவறை பழுதடைந்துள்ளதால் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். மேலும் உணவருந்தும் இடம், சிறிய அலுவலகம் மற்றும் காவலாளர் அறை இல்லாமல் உள்ளது. எனவே நுண்ணுயிர் செயலாக்க மையம் சிறப்பாக செயல்பட மேற்கண்ட அனைத்து பணிகளும் செய்ய வேண்டியுள்ளது. இவ்விடத்தினை ஆய்வு செய்த ஆணையாளர் மற்றும் பொறியாளர் உடனடியாக இப்பணியை செய்து முடிக்க அறிவுறுத்தினர். அதன்படி பணியினை மேற்கொள்ள ரூ.9.50 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 32**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 43 பழைய மத்திகிரி பேருந்து நிலையம் எதிரிலிருந்து ஆனந்த ஆசிரமம் மருத்துவமனை வரை கழிவுநீர் கால்வாய் வசதி இல்லாத காரணத்தினால் குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் சாலையில் தேங்கி சுகாதார சீர்கேடு உருவாவதாகவும் இப்பகுதியில் கழிவுநீர் கால்வாய் வசதி ஏற்படுத்தி கொடுக்குமாறும் அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். அப்பகுதியில் ஆணையாளர், பொறியாளரால் நேராய்வு மேற்கொள்ளப்பட்டது. அதுசமயம் இப்பகுதியில் கழிவுநீர் கால்வாய் வசதி ஏற்படுத்தி கொடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பணியினை மேற்கொள்ள ரூ.25.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 33**

ஒசூர் மாநகராட்சிக்கு சொந்தமான தளி ஹட்கோவில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் நீர்த்தேக்கத் தொட்டி (Sump) முழுவதும் பழுதடைந்து குடிநீர் சேமிப்பு செய்து இயக்கும் நிலையில் இல்லை. முழுவதும் பழுதடைந்துள்ளது. மேலும் பழுதடைந்துள்ள சம்ப்பினை அகற்றிவிட்டு அவ்விடத்தில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி பழுதடைந்துள்ள சம்பினை இடித்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது. மேற்படி பணிகளை மேற்கொள்ள ரூ.4.20 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 34**

ஒசூர் மாநகராட்சிக்கு சொந்தமான ஆனந்த நகர் நுண்ணுயிர் செயலாக்க மையத்தில் “உலர்களம்” (Drying Yard) போதுமானதாக இல்லை. உரத்தினை தொட்டியிலிருந்து எடுத்து காய வைக்க இடம் இல்லாததால் தரையில் கொட்டப்பட்டு வருகிறது. எனவே புதியதாக உலர்களம் அமைக்க ரூ.6.00 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 35**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2 ஜுஜுவாடி நேதாஜி நகரில் திறந்த வெளி கால்வாய், கழிவுநீர் குழாய் மற்றும் சிறுபாலம் பழுதடைந்து சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். இப்பகுதியில் ஆணையாளர் மற்றும் பொறியாளரால் நேராய்வு செய்யப்பட்டது. அதுசமயம் இப்பகுதியில் திறந்த வெளி கால்வாய், கழிவுநீர் குழாய் மற்றும் சிறுபாலம் அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பணியினை மேற்கொள்ள ரூ.9.90 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 36**

இம்மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு மற்றும் குடிநீர் விநியோகம் ஆகிய மின் இணைப்புகள் பயன்பாட்டில் இல்லாததால் நிரந்தரமாக மின் துண்டிப்பு செய்யவும் மற்றும் இம்மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதியதாக தெருவிளக்குகள் அமைக்கவும் மேலும் இம்மாநகராட்சி தளி ஹட்கோ பகுதியில் புதியதாக மின் இணைப்பு பெறவும் தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து பெறப்பட்ட கேட்பு தொகையை கீழ்க்கண்ட விவரப்படி செலுத்த தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | 33 | தளி ஹட்கோ நியூ ASTC பகுதியில் புதியதாக கட்டப்படும் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிக்கு மின் இணைப்பு பெற | 51,550/- |
| 2 | 9 | வினாயகபுரத்தில் பழைய மின் ஆழ்துளை கிணற்றுக்கு புதியதாக மின் இணைப்பு பெற | 16,350/- |
| 3 | 5 | கூடல் நகர் மற்றும் நாகம்மா நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக 10Nos தெருவிளக்குகள் அமைக்க | 63,500/- |
| 4 | 5 | செந்தமிழ் நகர் பகுதியில் புதியதாக தெருவிளக்குகள் அமைக்க | 1,37,190/- |
| 5 | | இம்மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் குடிநீர் விநியோகம் மற்றும் தெருவிளக்கு ஆகிய மின் இணைப்புகளுக்கு நிரந்தர மின் துண்டிப்பு செய்ய கேட்பு தொகை | 7,263/- |
| 6 | 40 | பாரத் நகர் பகுதியில் புதியதாக 4Nos தெருவிளக்குகள் அமைக்க<br>மொத்தம் | 2,75,853/-<br>43,030/-<br>3,18,883/- |

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி குடிநீர் மற்றும் தெருவிளக்குகள் அவசர அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணியை செய்ததை மன்றத்திற்கு அனுமதிக்கு வைக்கப்படுகிறது

பொருள் எண் 37

இம்மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதியதாக தெருவிளக்குகள் அமைக்கவும் மேலும் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ள மின்கம்பங்களை வேறு இடத்தில் மாற்றி அமைக்கவும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உடனடியாக கேட்பு தொகை செலுத்தவும் மேலும் மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய விண்ணப்ப கட்டணம் இணையதளம் மூலமாகவே செலுத்த வேண்டி உள்ளதால் 2021-2022ம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/-க்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் அவசர அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகை வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்
ஒசூர் மாநகராட்சி

2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ம் தேதி புதன் கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்

தலைமை – திரு.ம.செந்தில்முருகன்,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், ஒசூர் மாநகராட்சி

| பொருள் எண் | தீர்மான எண் | கூட்ட நடவடிக்கை |
|---|---|---|
| 1 | 208 | அனுமதிக்கப்பட்டது |
| 2 | 209 | அனுமதிக்கப்பட்டது |
| 3 | 210 | அனுமதிக்கப்பட்டது |
| 4 | 211 | அங்கீகரிக்கப்பட்டது |
| 5 | 212 | அனுமதிக்கப்பட்டது |
| 6 | 213 | அனுமதிக்கப்பட்டது |
| 7 | 214 | அனுமதிக்கப்பட்டது |
| 8 | 215 | அனுமதிக்கப்பட்டது |
| 9 | 216 | அனுமதிக்கப்பட்டது |
| 10 | 217 | அனுமதிக்கப்பட்டது |
| 11 | 218 | அங்கீகரிக்கப்பட்டது |
| 12 | 219 | அனுமதிக்கப்பட்டது |
| 13 | 220 | அனுமதிக்கப்பட்டது |
| 14 | 221 | அனுமதிக்கப்பட்டது |
| 15 | 222 | அனுமதிக்கப்பட்டது |
| 16 | 223 | அனுமதிக்கப்பட்டது |
| 17 | 224 | அனுமதிக்கப்பட்டது |
| 18 | 225 | அனுமதிக்கப்பட்டது |
| 19 | 226 | அனுமதிக்கப்பட்டது |
| 20 | 227 | அனுமதிக்கப்பட்டது |
| 21 | 228 | அனுமதிக்கப்பட்டது |
| 22 | 229 | அனுமதிக்கப்பட்டது |
| 23 | 230 | அனுமதிக்கப்பட்டது |
| 24 | 231 | அனுமதிக்கப்பட்டது |
| 25 | 232 | அனுமதிக்கப்பட்டது |
| 26 | 233 | அனுமதிக்கப்பட்டது |
| 27 | 234 | அனுமதிக்கப்பட்டது |
| 28 | 235 | அனுமதிக்கப்பட்டது |
| 29 | 236 | அனுமதிக்கப்பட்டது |
| 30 | 237 | அனுமதிக்கப்பட்டது |
| 31 | 238 | அனுமதிக்கப்பட்டது |
| 32 | 239 | அனுமதிக்கப்பட்டது |
| 33 | 240 | அனுமதிக்கப்பட்டது |
| 34 | 241 | அனுமதிக்கப்பட்டது |
| 35 | 242 | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 36 | 243 | அனுமதிக்கப்பட்டது |
| 37 | 244 | அனுமதிக்கப்பட்டது |

(ஒம்) ம.செந்தில்முருகன்
தனி அலுவலர்
ஒசூர் மாநகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்
ஒசூர் மாநகராட்சி